கடிதம் (1டி) எண்.145 நாள் 10.03.2008

அனுப்புநர்
திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.

அய்யா,

பொருள் : சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2007–2008 – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருச்சி–II தொகுதி – திருச்சி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நுகர்வோர் நீதிமன்றம் கட்ட அனுமதி கோரியது – அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 17.5.07.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி கடிதம் எண்.அ4/ 1704 /2007, நாள் 17.9.2007.
3. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.84620 /07/என்.இடி.எம்.3 நாள் 18.12.2007.

––––

பார்வை 3ல் உள்ள ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் கடிதத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் மற்றும் திருச்சி 2வது தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2007–2008ஆம் ஆண்டு நிதியிலிருந்து ரூ.10.30 லட்சம் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி நீதிமன்ற வளாகத்தில் நுகர்வோர் நீதிமன்றம் கட்டுவதற்கு பரிந்துரை செய்துள்ளார் என்றும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சித்துறை நாள் 17.5.2007ல் அரசு அலுவலகங்களின் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவது தடை செய்யப்பட்டுள்ள பணிகளாகும் என்றும், ஆனால் மேற்குறிப்பிட்ட நுகர்வோர் நீதிமன்ற கட்டிடம் கட்டும் பணியானது பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதுடன், பொதுமக்களின் நுகர்வோர் சம்பந்தமான பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் இடமாக அமையும் என்பதால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளைத் தளர்த்தி இதற்கு அனுமதிக்குமாறு கேட்டுள்ளார். மேலும், மேற்குறிப்பிட்ட பணியானது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது என்றும் அதனால் திருச்சி–2 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் வரையறுக்கப்படாத நிதியிலிருந்து, இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளைத் தளர்த்தி ரூ.10.30 லட்சத்தை, சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதிக்குமாறு அரசைக் கேட்டுள்ளார்.

2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, திருச்சி–2 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு 2007–08ஆம் ஆண்டு திட்ட வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.10.30 லட்சம் செலவில், திருச்சிராப்பள்ளி நீதிமன்ற வளாகத்தில் நுகர்வோர் நீதிமன்றம் கட்டும் பணியை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளிலிருந்து விலக்களித்து, ஒரு சிறப்பு இனமாகக் கருதி அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், இப்பணி குறித்து தேவையான தொடர் நடவடிக்கை எடுக்க திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

சிறப்பு ஆணையர் மற்றும்
அரசு செயலாளருக்காக.